(4) பெரியார் மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் அ. பொன்னுசாமி, ச. பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு அதைக்கொண்டு வருவார்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பெரியார் மாவட்டம், பெருந்துறை மற்றும் ஊத்துக்குளி ஒன்றியப் பகுதிகள் கடுமையான வறட்சியின் பிடியில் சிக்கி உள்ளதால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு நிலவரி, விவசாயக் கடன் மற்றும் மின் கட்டணம் செலுத்த இயலாமலுள்ள நிலை குறித்த' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதி பற்றிய வறட்சி நிலைமை, அவற்றிற்காக செய்யவேண்டிய சலுகைகள் மற்றவைகளை பற்றிய விரிவான அறிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய்த் துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆக, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அந்த அறிக்கை கிடைக்கப்பெற்று ஆராய்ந்து பிறகு தக்க நடவடிக்கைகளை எடுக்க இருக்கின்றார்கள். விரைவில் நடவடிக்கை எடுக்கும் படியாக அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கான உரிய நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.

(5) சென்னை குடிசைப் பகுதிகள் சிலவற்றில் ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், மற்றும் கோ. வீரையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''1—4—1986 ஆம் தேதியன்று தாம்பரம் ரெங்கநாதபுரம் மற்றும் சென்னை மாம்பலம் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்துகளினால் பல குடிசை வீடுகள் எரிந்து நாசமாகி பல ஆயிரம் ரூபாய்கள் நஷ்டமேற்பட்டுள்ளதனால் அப்பகுதிவாழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, சைதாப்பேட்டை, வட்டம், கடப்பேரி கிராமத்தைச் சேர்ந்த ரெங்கநாதபுரத்தில 1—4—1986 அன்று 3-30 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. அதில் 35 குடிசைகள் பாதிக்கப்பட்டன. அதன் காரணமாக சட்டப் படி கொடுக்க வேண்டிய நிவாரணங்கள் அங்கே வழங்கப்பட் டிருக்கின்றன. ஆனால் மாம்பலம் பகுதியில் அப்படிப்பட்ட தீ விபத்து எதுவும் நடைபெறவில்லை. ஆனால் அந்த 35 குடிசை களுக்கு முறைப்படி வழங்கப்பட வேண்டிய சலுகைகள் வழங்கப் பட்டிருக்கின்றன.

(6) சென்னை அம்பத்தூர் இந்தியா போர்ஜ் நிறுவனத்தை மீண்டும் திறப்பது குறித்து.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, "சென்னை, அம்பத்தூர், இந்தியா போர்ஜ் நிறு வனத்தைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளாததோடு முத லமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அத்தொழிலாளர்களுக்கு நிவா ரணம் வழங்கப்படாமையால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை, அம்பத்தூரிலுள்ள இந்தியா போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்ஸ் லிமிடெட் என்னும் போர்ஜிங்ஸ் தயாரிக்கும் நிறுவனத்தில் சுமார் 500 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந் தனர். திரு. குசேலரை தலைவராகக் கொண்ட இந்தியா போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் என்னும் சங்கம் இந்நிறுவனத்தில் இயங்குகிறது.

2. தொடர்ச்சியாக தொழிலில் மந்தம், அதன் காரண மாக உற்பத்தி பொருள்களுக்கு தேவை ஏற்படாதது, உற்பத்தி பொருள் தேக்கம், தொடர்ந்து ஏற்பட்ட நட்டம் ஆகியவற்றின் காரணமாக இந்நிறுவனத்தை 14—1—1984 முதல் மூடுவதாக நிர்வாகம் அறிவித்து பிறகு 19—1—1984 அன்று முதல்தான் நிறுவ னத்தை மூடியது. இத் தொழிற் தகராறில் சென்னை, இரண் டாம் தொழிலாளர் துறை துணை ஆணையர் மேற்கொண்ட சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஒப்பந்தம் ஏற்படாததால் அர சுக்கு அவர் தனது சமரச முறிவறிக்கையை அனுப்பினார். இந்த அறிக்கையின் மீது அரசு ஆணை பிறப்பித்து இத்தொழிற்